www.nunnarivu.com
செப்டம்பர் 2025 Price ₹ 15/-

# நீதியின் நுண்ணறிவு

Vol.5 Issue.12
NEETHIYIN NUNNARIVU
புலனாய்வு இதழ்



## தமிழக அரசுக்கு கிடைத்த மிகப்பெரும் சொத்து..!

## பிரியங்கா பங்கஜம் ஐஏஎஸ்



## தமிழகத்தின் பொறுப்பு டி.ஜி.பி. பதவியேற்பு!



## அதிரடி காட்டும் ஐ.ஜி அஸ்ரா கார்க்!



## முதல்வர் ஸ்டாலின் கையில் உள்ள காவல்துறை மக்களை காக்கவா! காக்கிகளை காக்கவா?


SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com


SODEX
Liquid Laundry Detergent
SODEX
Floor Cleaner
SODEX
Toilet Cleaner
Active Formula
SODEX
DISHWASH LIQUID
SODEX
Fabric Softener
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaglivakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
பொருளோ தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!

www.nunnarivu.com
நீதியின் நுண்ணறிவு
NEETHIYIN NUNNARIVU புலனாய்வு இதழ்

ஆசிரியர் வெளியீட்டாளர்
**R.சிவகுமார்**

இணை ஆசிரியர்கள்
J.கணேசபாண்டி, A.விஜய், G.ஜெயபிரகாஷ்நாராயணன்

துணை ஆசிரியர்கள்
D.சிவராஜ், K.பாரதிராஜா, G.சுரேந்திரன்,
B.காந்திநாதன், S.ராஜ்நாராயணன்

கௌரவ ஆலோசகர்கள்
R.வீரராகவன் B.Sc., M.A., M.B.M., LL.B.,
A.கந்தசாமி S.P.
காவல்துறை கண்காணிப்பாளர் (ஓய்வு)
சுபாஷ் சந்திரபோஸ்
காவல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு)
Dr.K.முருகேசன் M.B.B.S., D.L.O.,
மா.செல்வராஜ்
(முன்னாள் முதல்வர் - குருநானக்கல்லூரி)
(மாநில தகவல் ஆணையர்)
சோம்புராஜன்
கூடுதல்ஆணையர், தொழிலாளர்துறை (ஓய்வு)
டாக்டர். மணிவண்ணன் B.S.M.S.
S.வீரப்பன்

முதன்மை நிருபர்கள்
M.சுப்பிரமணியன், R.சதீஷ்குமார், S.ஆனந்த்,
V.மாதவன், A.ராஜ்மோகன்

நிருபர்கள்
R.இன்பசேகரன், G.மோகன், S.சாம்எட்வின்,
C.சரவணன், S.சீனிவாசன், S.சஞ்சய்குமார்,
இம்ரான்கான், A.மதிமாறன், J.ஜெஸ்டின்டேவிஸ்,
T.தங்கபாண்டியன்

புகைப்பட கலைஞர் : விஜயகுமார்

சட்ட ஆலோசகர்கள்
K.M.S.செந்தில்குமார் BSc., B.L.,
M.சரவணன் M.Sc., B.L.,
A.வெங்கடேஷ்பாபு B.Sc., B.L.,

வடிவமைப்பு : 4 மீடியா டிசைன்ஸ்

**நிர்வாக அலுவலகம்:**
எண். 14/88, வெங்கடேஸ்வரா நகர், 3வது
மெயின்ரோடு, வேளச்சேரி, சென்னை- 42.
போன் : **9884949445, 99624 56555**
**nunnarivuidhal@gmail.com**
**www.nunnarivu.com**

உலகளவில் தினமும் 73 கோடிக்கு மேல் பட்டினியால் வாடுவதாக கூறப்படும் அறிக்கை மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது. குறிப்பாக, சில ஆப்ரிக்க நாடுகள் அபாயம் நிறைந்த பட்டினி நாடுகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. கடந்த 2024ம் ஆண்டு அயர்லாந்தின் கன்சர்ன் வேர்ல்டுவைட், ஜெர்மனியின் வெல்த் ஹங்கர் லைப் இணைந்து, சர்வதேச அளவில் 127 நாடுகளில் பட்டினி குறியீடு குறித்து ஆய்வு மேற்கொண்டது. இதில் இந்தியா 105வது இடத்தில் உள்ளது. இதில் கொடுமை என்னவென்றால் பொருளாதாரரீதியாக நலிவடைந்து வரும் இலங்கை(60), வங்கதேசம்(81), பாகிஸ்தான்(102), ஆகிய நாடுகளை விட இந்தியா பின்னால் இருப்பதுதான். இந்திய அளவில் 2.5 சதவீத குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக, 5 வயதிற்குள் இறப்பதாக வரும் ஆய்வு மேலும் கவலை அளிக்கிறது. இந்த ஆய்வறிக்கையை ஒன்றிய அரசு மறுத்தாலும், இந்திய அளவில் பீகார், ஜார்க்கண்ட், சட்டீஸ்கர் மாநிலங்களில் பட்டினியால் வாடுவோர் அதிகளவில் உள்ளனர்.

இந்நிலை மாற விருட்சமாக தோன்றிய ஒரு சிந்தனையே, தற்போது தமிழகம் முழுவதும் காலை உணவு திட்டம் விரிவாக்கம் என்ற ஆலமரமாக வளர்ந்து கிளைகளை பரப்பியுள்ளது. திராவிட மாடல் அரசு கல்விக்காக எத்தனையோவிதமான திட்டங்களை உணர்வுபூர்வமாக செய்து வருகிறது. அதேநேரம் உணவு பூர்வமாகவும் ஒரு திட்டத்தை கொண்டு வந்து, பிற மாநில முதல்வர்களும் தங்களது மாநிலத்தில் இத்திட்டத்தை கொண்டு வர வேண்டுமென்ற எண்ணத்தை மனதில் விதைத்துள்ளது.

‘தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்’ என்றார் மகாகவி பாரதியார். பல கோடி பேர் உணவில்லாமல் பரிதவிக்கும் நிலையில், எத்தனை ஜகத்தினை நம்மால் அழித்திட முடியும்? பசியில்லா தமிழகம் என்ற இலக்கை நோக்கி நம் மாநிலம் மட்டுமின்றி, இந்தியாவும் முன்னேற வேண்டுமென்பதே அனைவரின் விருப்பமாகும்.



**- ஆர்.சிவகுமார்,**
**ஆசிரியர்**



## நண்பனின் நினைவாக சீர்காழியில் நடைபெற்ற

# மாநில கூடைப்பந்து போட்டியில் சென்னை அணி வெற்றி பெற்றது...!

சீர்காழியில் நடைபெற்ற மாநில அளவிலான கூடைப்பந்தாட்ட போட்டியில் சென்னை அணி கோப்பையை வென்றது.

சீர்காழியில், ஜி.ஆர்.பி. நினைவு கூடைப்பந்து கழகம் மற்றும் நாகை 'மாவட்ட கூடைப்பந்து கழகம் சார்பில் மாநில அளவில் 8—ஆம் ஆண்டு கூடைப்பந்தாட்டப் போட்டி வெள்ளிக்கிழமை (ஆக.22) முதல் 3 நாள்கள் நடை பெற்றது.

போட்டி தொடக்க நிகழ்ச்சிக்கு, தமிழ்நாடு மாஸ்டர் அத்லெட்டிக் தலைவர் ஜி. ராமமூர்த்தி தலைமை வகித்தார். மயிலாடுதுறை மாவட்ட கூடைப் பந்தாட்டக் கழகத்தலைவர் ஆர். பிரவின்வசந்த் ஜெபேஸ் முன்னிலைவகித்தார். சீர்காழி காவல் ஆய்வாளர் கமல்ராஜ், தலைமை ஆசிரியர்கள் முரளிதரன், ரூபி பிளாரென்ஸ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றனர்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதுநிலை மேலாளர் எஸ். ராபின்சன், பால்கன் பிளாக் இயக்குநர் பி. செந்தில், அரசுபோக்குவரத்து கழக கிளை மேலாளர் டி. கபிலன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் செந்தில், நகர கூட்டுறவு வங்கி மேலாளர் எஸ். கருணாநிதி ஆகியோர் போட்டிகளை தொடங்கி வைத்தனர்.








இதில், சென்னை, கோவை, நாகர்கோவில், கடலூர் உள்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 16 அணிகள் பங்கேற்றன. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென்னை வி.கே. ஜெயராமன் பி.பி.சி. அணியும், நாகர்கோவில் ஐ.எஸ்.ஏ. பி.பி.சி. அணியும்மோதின.


இதில், சென்னை அணி 57 புள்ளிகள் பெற்று வெற்றி பெற்றது. நாகர்கோவில் அணி 40 புள்ளிகள் பெற்றது.

மூன்றாமிடம் கும்பகோணம் டெல்டா பிபிஏ அணியும், நான்காமிடத்தை கரூர் டெக்ஸ்சிட்டி பி.பி.சி. அணியும் பெற்றது.

பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், விவேகானந்தா கல்விக் குழும தாளாளர் கே.வி. ராதாகிருஷ்ணன், நகர வர்த்தக சங்கத் தலைவர் சுடர். எஸ். கல்யாணசுந்தரம், காவல் ஆய்வா ளர் புயல். எஸ். பாலச்சந்திரன் ஆகியோர் வழங்கினர். நிறைவாக ராஜ் நன்றி கூறினார்.

முதலிடம் பெற்ற அணிக்கு கோப்பை மற்றும் ரூ.10,000—மும், இரண்டாமிடம் பெற்ற அணிக்கு ரூ. 8,000—மும் வழங்கப் பட்டது. மூன்றாமிடம் பெற்ற அணிக்கு ரூ. 6,000 மற்றும் நான்காமிடம் பெற்ற அணிக்கு ரூ. 4,000 வழங்கப்பட்டது.





# திருட்டு வழக்கில் குற்றவாளி அதிரடி கைது..

## சிறப்பாக பணியாற்றிய தனிப்படையினருக்கு புதுக்கோட்டை எஸ்.பி பாராட்டு

புதுக்கோட்டை மாவட்டம், நகர காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் திருட்டில் ஈடுபட்ட எதிரியை பிடிக்க புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அபிஷேக் குப்தா இ.கா.ப., அவர்களின் உத்தரவின்படி தனிப்படை அமைத்த நிலையில், தனிப்படை காவல்துறையினர் அதிரடியாக செயல்பட்டு பல்வேறு திருட்டு வழக்கில் தொடர்புடைய எதிரியை கைது செய்து அவரிடமிருந்து 57 ½ சவரன் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டது. மேலும் குற்றவாளியை விரைவாக பிடிக்க உதவியாக இருந்த தனிப்படையினரை புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரடியாக அழைத்து வெகுவாக பாராட்டி சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்...

# ஓய்வுபெறும் நாளில் அரசு ஊழியர்களை சஸ்பெண்ட் செய்ய தடை..!

**ஓய்வுபெறும் நாளில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீதான சஸ்பெண்ட் நடவடிக்கை இனி கிடையாது என்று விதிகளில் திருத்தம் செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.**

இதன்படி குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் உரிய தேதியில் ஓய்வுபெற அனுமதிக்கப்படுவார்கள். குற்றச்சாட்டுகள் மீதான விசாரணை முடிவடைந்தபிறகே பணப் பலன்களைப் பெற முடியும். இதுவரை குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களை ஓய்வுபெறும் நாளில் சஸ்பெண்ட் செய்யும் நடைமுறை பின்பற்றப்படுவதாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் அரசு ஊழியர்களை ஓய்வுபெறும் நாளில் ‘சஸ்பெண்ட்’ செய்யும் நடைமுறையை தவிர்ப்பதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டது. இதுதொடர்பாக தமிழ்நாடு அரசின் மனிதவள மேலாண்மைத் துறைவெளியிட்ட அரசாணையில், அரசு ஊழியர்கள் தவறு செய்யும்நிலையில் அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில், துறைரீதியான விசாரணை நடத்தப்பட்டு, தண்டனை வழங்கப்படுகிறது. சில வழக்குகளில் தவறு செய்பவர் மீதான விசாரணை நீண்டகாலம் செல்லும்போது, துறை ரீதியான ஒழுங்கு நடவடிககைக்காக அவர் தற்காலிக இடைநீக்கத்தில் (சஸ்பெண்ட்) வைக்கப்படுகிறார்.

இந்நிலையில் விசாரணையில் ஏற்படும் தாமதத்தை தவிர்க்க தமிழக அரசு சில வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. அதன்படி, துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் முன்னர், சம்பந்தப்பட்ட அரசு ஊழியர் மீதான குற்றச்சாட்டுக்களில் முகாந்திரம்




உள்ளதா, மிகப்பெரிய தண்டனை, குறிப்பாக பணி நீக்கம் செய்வதற்கு உரியதா என்பது ஆய்வு செய்யப்பட வேண்டும். இதன் மூலம், தேவையற்ற தாமதம் தவிர்க்கப்படும். அரசு ஊழியர் ஒருவர் முறைகேட்டில் ஈடுபட்டது தெரியவந்தால், ஓய்வு பெறும் நாளில் பணியிடைநீக்கம் செய்வதை தவிர்த்து, 3 மாதங்களுக்கு முன்னதாகவே உரிய முடிவை எடுக்க வேண்டும்.

விசாரணை, நடவடிக்கை ஆகியவற்றுக்கு உரிய கால அளவை ஒழுங்கு நடவடிக்கை அதிகாரிகள் பின்பற்ற வேண்டும். சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்ஓய்வு பெறுவதைக் கருத்தில்கொண்டு அவருக்கு எதிரான குற்றச்சாட்டில் உரிய விளக்கத்தை அளிக்க வாய்ப்பு கொடுத்து, இயற்கை நியதிக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த செயல்பாடுகள் அனைத்தும் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டும்.

ஓய்வு பெறுவதற்கு முன்னரே அதாவது 3 மாதங்களுக்கு முன்னரே துறை ரீதியான நடவடிக்கைகளை முடிக்க வேண்டும். அவ்வாறு முடிக்க இயலாத பட்சத்தில், நடவடிக்கையில் நிர்வாக ரீதியான தாமதத்தைக் கருத்தில்கொண்டு அந்த அரசு ஊழியரை

ஓய்வுபெற அனுமதிக்க வேண்டும். ஓய்வு பெறும் நாளுக்கு 3 மாதங்களுக்கு முன் ஏதேனும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், போர்க்கால அடிப்படையில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறு நடைபெற்றிருப்பது கண்டறியப்பட்டால் பணியிடை நீக்கம் செய்யலாம்.

முறைகேட்டில் ஈடுபட்ட அரசுஊழியர்கள் மீதான நடவடிக்கையை 3 மாதங்களுக்கு முன் முடிக்காமல் விசாரணை அதிகாரி தாமதப்படுத்தியிருப்பது தெரியவந்தால், அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம். இந்த அறிவுறுத்தல்கள் அனைத்தும் லஞ்ச ஒழிப்புத் துறையின் விசாரணை, குற்ற வழக்குகளுக்குப் பொருந்தாது" என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த சூழலில் ஓய்வுபெறும் நாளில் சஸ்பெண்ட் செய்யும் நடைமுறை தொடர்ந்து வருவதாக அரசு ஊழியர்கள் அதிருப்தியை வெளிப்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில், ஓய்வுபெறும் நாளில் சஸ்பெண்ட் நடவடிக்கை கிடையாது என தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி ஓய்வுபெறும் நாளில் இனி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீதான சஸ்பெண்ட் நடவடிக்கை இருக்காது. அதற்கான விதிகளில் திருத்தம் செய்து தமிழ்நாடு அரசு இந்த அரசாணையை வெளியிட்டு உள்ளது.




# தொழிற்திறன் மற்றும் விளையாட்டு போட்டிகளில் கோப்பைகள் வென்ற ஊர்க்காவல்படையினர்

தமிழ்நாடு ஊர்க்காவல்படை சார்பில் நடத்தப்பட்ட 29–வது தொழிற்திறன் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் திருச்சி மாவட்ட ஊர்க்காவல்படை சார்பில் கலந்து கொண்ட ஊர்க்காவல்படையினர் முதலுதவி, துப்பாக்கி சுடுதல், கபாடி போட்டி மற்றும் ஓட்ட பந்தயம் ஆகிய போட்டிகளில் கோப்பைகள் வென்றனர். தொழிற்திறன் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கோப்பைகள் வென்ற ஊர்க்காவல்படையினரை திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்கள் பாராட்டினார்.



# தமிழகத்தின் பொறுப்பு டி.ஜி.பி. பதவியேற்பு!

தமிழகக் காவல்துறையின் மிக உயர்ந்த பதவியான சட்ட ஒழுங்கு டி.ஜி.பி.யாக கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதி (30.06.2023) முதல் சங்கர் ஜிவால் பணியாற்றி வந்தார். இத்தகைய சூழலில் தான் சங்கர் ஜிவால் (31.08.2025) பணி ஓய்வு பெற்றார். இதற்கிடையே தமிழகத்தின் புதிய காவல்துறை தலைமை இயக்குநராக (பொறுப்பு) ஜி. வெங்கட்ராமன் ஐ.பி.எஸ். நியமிக்கப்பட்டார். இவர் கடந்த 1994ஆம் ஆண்டு காவல்துறை பணியில் சேர்ந்தார். காவல் கண்காணிப்பாளராக பெரம்பலூர் மற்றும் சேலம் மாவட்டங்களிலும், மதுரை மாநகர சட்டம் ஒழுங்கில் காவல் துணை ஆணையராகவும் மற்றும் மத்தியப் புலனாய்வுப் பிரிவிலும் பணியாற்றியுள்ளார். மேலும், காவல் துணைத் தலைவராக சேலம் சரகத்திலும் மற்றும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையிலும் பணியாற்றினார்.

அதோடு காவல்துறை தலைவராக ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறையிலும் பணிபுரிந்துள்ளார். மேலும் காவல்துறை கூடுதல் இயக்குநராக சைபர் குற்றப் பிரிவிலும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையிலும் பணிபுரிந்துள்ளார். அதன் தொடர்ச்சியாக காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் காவல் தலைவர், காவல் கூடுதல் இயக்குநர் மற்றும் காவல் இயக்குநர் போன்ற பதவிகளை வகித்துள்ளார். இந்நிலையில் காவல்துறை தலைமையகத்தில் தமிழக டிஜிபியாக பதவி வகித்த சங்கர் ஜிவால், பொறுப்பு டி.ஜி.பி.யாக பதவியேற்கும் ஜி. வெங்கட்ராமனிடம் முறைப்படி பொறுப்புகளை ஒப்படைத்தார்.

அதனைத்தொடர்ந்து பொறுப்பு டிஜிபியாக ஜி. வெங்கட்ராமன் கோப்புகளில் கையெழுத்திட்டுப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் காவல் துறையின் மூத்த அதிகாரிகள் மற்றும் டிஜிபி அலுவலக அலுவலர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக தமிழக டிஜிபியாக பதவி வகித்து வந்த சங்கர் ஜிவாலின் கடைசி பணி நாள் கடந்த 29ஆம் தேதி (29.08.2025) ஆகும். எனவே அன்று மாலை அவருக்கான பிரிவு உபசார விழா நடைபெற்றது. இத்தகைய சூழலில் தான் சங்கர் ஜிவாலுக்கு தீ ஆணைய (Fire Commission) தலைவராகப் பதவி வழங்கப்பட்டது. இதனையடுத்து சென்னை தலைமைச் செயலகத்தில், சங்கர் ஜிவால் ஓய்வு பெறுவதையொட்டியும், தீ ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டதையொட்டியும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து வாழ்த்து பெற்றது குறிப்பிடத்தக்கது.




சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள் உத்தரவின்பேரில், மேற்கு மண்டலத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் முகாமில், திருமதி. திஷா மித்தல், இ.கா.ப., காவல் இணை ஆணையாளர் அவர்கள் பொதுமக்களிடம் இருந்து புகார் மனுக்களை நேரில் பெற்று, விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.




மதுரை மாநகர போக்குவரத்து காவல்துறையில் பணிபுரிந்த (அயல்பணி உணவுக் கடத்தல் தடுப்பு பிரிவு) தலைமை காவலர் 2535 திரு. காசி விஸ்வநாதன் அவர்கள் பிப்ரவரி 03ஆம் தேதி பணிக்கு செல்லும் போது, நாகமலை புதுக்கோட்டையில் நிகழ்ந்த வாகன விபத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். காவலரின் குடும்பத்திற்கு SBI விபத்து நிவாரண உதவி தொகை ரூபாய் 1,00,00,000 க்கான காசோலையை மதுரை மாநகர காவல் ஆணையர் முனைவர் ஜெ.லோகநாதன் இ.கா.ப., அவர்கள் வழங்கினார். ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் கிளை மேலாளர் மற்றும் வங்கி அலுவலக அதிகாரிகள் உடன் இருந்தனர்.






02.09.2025 திண்டுக்கல் மாவட்ட காவல் அலுவலகத்தில் திண்டுக்கல் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட 08 புதிய பொலிரோ வாகனங்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர்.அ.பிரதீப்., இ.கா.ப., அவர்கள் பார்வையிட்டு வாகனங்களை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர்களிடம் ஒப்படைத்து கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.



02.09.2025 தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டம் மற்றும் ஒழுங்கு கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் திரு.டேவிட்சன் தேவாசீர்வாதம் இ.கா.ப., அவர்கள் கும்பகோணம் உட்கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தை ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து கும்பகோணம் மேற்கு காவல் நிலையத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட நூலகத்தை திறந்து வைத்தார்கள்.

காரைக்கால் பகுதியில் இருந்து சட்ட விரோதமாக 200 PONDY ARRACK பாட்டில்களை கடத்தி வந்த ராதாகிருஷ்ணன் த/பெ ராயர் என்பவர் கைது செய்யப்பட்டு, கடத்தலுக்கு பயன்படுத்திய இரு சக்கர வாகனம் கைப்பற்றப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.






# விருகம்பாக்கம் பகுதியில் வெளிமாநில லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்த 3 நபர்கள் கைது..!

**5 செல்போன்கள், பணம் ரூ.4,760/- மற்றும் 7 பில் புத்தகங்கள் பறிமுதல்.**








சென்னை பெருநகரில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகள், வெளி மாநில, ஒரு நம்பர் மற்றும் மூன்று நம்பர் லாட்டரி சீட்டுகளை சட்டவிரோதமாக விற்பனை செய்யும் நபர்களை கண்காணித்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப, அவர்கள் உத்தரவிட்டதின் பேரில், உதவி ஆணையாளர்களின் நேரடி மேற்பார்வையில், தனிப்படை காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு இது போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக R—5 விருகம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் (01.09.2025) மதியம், விருகம்பாக்கம், இந்திரா நகர் 2வது குறுக்கு தெருவில் கண்காணித்து, அங்கு, வெளி மாநில லாட்டரி சீட்டுகளின் எண்களை துண்டு காகிதத்தில் எழுதி கொடுத்து, செல்போன் மூலம் முடிவுகளை பார்த்து சட்டவிரோதமாக லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்து கொண்டிருந்த 1.பிரபாகரன், வ/48, இந்திராநகர் 2வது குறுக்கு தெரு, விருகம்பாக்கம், 2.அருண்குமார், வ/37, இந்திரா நகர் 1வது குறுக்கு தெரு, விருகம்பாக்கம், 3.யாக்கோப், வ/41, கம்பர் தெரு, விருகம்பாக்கம் ஆகிய 3 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 5 செல்போன்கள், பணம் ரூ.4,760/— மற்றும் 7 பில் புத்தகங்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் (01.09.2025) நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# தமிழ்நாடு முழுவதும் பறந்த அதிரடி உத்தரவு..




அரசு அலுவலகங்களில் மக்கள் கொடுக்கும் மனுக்கள் மீதான நடவடிக்கைகளை முறையாக பின்பற்றுதல் தொடர்பாக தலைமை செயலாளர் முருகானந்தம் அரசாணை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அரசாணையில், 'நேரடியாக மற்றும் இ–மெயில் மூலமாக பெறப்படும் குறை மனுக்களின் மீது 3 நாட்களுக்குள் மனுவை பெற்று கொண்டதற்கான ஒப்புகை வழங்கப்பட வேண்டும். மனு பெறப்பட்ட ஒரு மாதத்திற்குள் குறைகள் களையப்பட வேண்டும். இந்த உத்தரவை கடைபிடிக்காத அலுவலர்கள் மீதுநடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குனர் அலுவலகத்தில், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ. அருண். இ.கா.ப., அவர்கள் சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையர்கள் மற்றும் அதிகாரிகளுடன் திரு.க.வெங்கடராமன் இ.கா.ப., காவல்துறை இயக்குநர்/காவல் படைத்தலைவர் அவர்களை சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



## சாலையில் கிடந்த பணத்தை காவல்நிலையத்தில் ஒப்படைத்த

# 108 ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்கு பாராட்டுக்கள்

மணப்பாறை அரசு மருத்துவமனை அருகே சாலையில் கேட்பாரற்று கிடந்த பையில் இருந்த ரூபாய் 2,45,900/– பணத்தை மணப்பாறை காவல் நிலையத்தில் ஒப்படைத்த 108 ஆம்புலன்ஸ் ஓட்டுநர் திரு.பிரதாப் தாமஸ் மற்றும் மருத்துவ உதவியாளர் திரு.பாரூக் சாம்சன் ஆகியோரின் நேர்மையான செயலினை பாராட்டி திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநகரத்தினம், இ.கா.ப., அவர்கள் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.



# ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பெரியார் உருவப்படத்தை திறந்து வைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.9.2025 அன்று இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழா மற்றும் கருத்தரங்கு நிகழ்ச்சியில், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து உரையாற்றினார்.

இதனுடன், “The Dravidian Pathway” மற்றும் “The Cambridge Companion to Periyar” ஆகிய இரு நூல்களையும் அவர் வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், பெரியாரின் பகுத்தறிவு, சமூக நீதி, மற்றும் சுயமரியாதைக் கொள்கைகளை உலகளவில் பரப்புவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், “தோட்டா தரணி அவர்களின் கைவண்ணத்தில் உருவாகி, Oxford–இல் பெரியாரின் பேரனாக நான் திறந்து வைத்துள்ள அறிவுலக ஆசான் தந்தை பெரியாரின் உருவப் படம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த விழாவில், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி.ராஜா, ஆக்ஸ்ஃபோர்டு பல்ககலைக்கழகத்தின் பேராசிரியர் ஃபைசல் பிரேம்ஜி, பேராசிரியர் ஜிம் லெனின்ஸ், கல்வியாளர் திருமதி பிரமிளா பெஸ்டர், பேராசிரியர் முனைவர் ஆ.இரா.வெங்கடாசலபதி, பேராசிரியர் கார்த்திக் ராம் மனோகரன், ஆராய்ச்சியாளர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# வட மாநில தொழிலாளர் உயிரிழப்பு...

## போலீசார் மீது போராட்டக்காரர்கள் கல் வீச்சு!

சென்னையை அடுத்துள்ள காட்டுப்பள்ளியில் தனியாருக்குச் சொந்தமான பிரபல கப்பல் கட்டும் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இங்கு 6000க்கும் மேற்பட்ட வடமாநில தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் ஒருவராகவும், ஒப்பந்த தொழிலாளராகவும் உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த அமர் பிரசாத் என்பவர் வேலை பார்த்து வந்துள்ளார். இந்நிலையில் நேற்று இரவு இவர் தங்கியுள்ள வீட்டின் மாடியில் ஏறும்போது தவறி விழுந்து உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த காட்டூர் காவல் துறையினர் சடலத்தை மீட்டு உடற்கூறு ஆய்வுக்காகச் சென்னை அரசு ஸ்டாலின் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது தொடர்பாகத் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மற்றொருபுறம் வடமாநில தொழிலாளி உயிரிழந்தது குறித்து உரிய முறையின் விசாரணை நடத்த வேண்டும். அவருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என க் கூறி ஆயிரத்துக்கும் மேற்பட்ட வடமாநில தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதாவது காட்டுப்பள்ளி சாலையில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனவே அங்குப் பதற்றமான சூழல் நிலவியது. அதோடு அதிகாரிகளும் போராட்டத்தில் ஈடுபட்ட வட மாநில தொழிலாளர்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள், "உயிரிழந்தவரின் சடலத்தை ஒப்படைக்க வரவேண்டும். அவரது உடலைக் காட்ட வேண்டும். இழப்பீடு வழங்க வேண்டும்" எனத் தெரிவித்தனர்.

அதே சமயம் வட மாநிலத்தவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் காவல்துறை மீது வட மாநிலத்தவர் கள் அவர்கள் கற்களை வீசினார். இதனால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. இதன் காரணமாக வட மாநிலத்தவர் கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டு வீசியும், தடியடி நடத்தியும் காவல் துறையினர் விரட்டியடித்து நடவடிக்கை எடுத்தனர். இந்த தாக்குதலில் காவல் துணை ஆணையர் உட்பட 10க்கும் மேற்பட்ட காவல் துறையினர் காயம் அடைந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. போராட்டத்தில் ஈடுபட்ட வடமாநில தொழிலாளர்களிடம் சமரசம் செய்ய சென்ற காவல் துறையினர் மீது கற்களை வீசியதால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.இதனையடுத்து காவல்துறையினர் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியது தொடர்பாக வட மாநில தொழிலாளர்கள் மீது 6 பிரிவுகளில் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.



## ‘மத்திய அரசை கண்டித்து உண்ணாவிரதப் போராட்டம்’

# வாபஸ் பெற்றது ஏன்? : சசிகாந்த் செந்தில்

தமிழ்நாடு அரசுக்கு வழங்க வேண்டிய கல்வித் தொகையை மத்திய அரசு இன்னும் வழங்கவில்லை. இதை கண்டித்து திருவள்ளூர் காங்கிரஸ் எம்.பி. சசிகாந்த் செந்தில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்.

இதனால், அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. இதையடுத்து, சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போதும், உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து வந்தார்.

இந்த நிலையில், தற்போது சசிகாந்த் செந்தில் தற்காலிகமாக தனது உண்ணாவிரதப் போராட்டத்தை வாபஸ் பெற்றுள்ளார்.

இதற்கான காரணத்தை விளக்கி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: "ஏழை, எளிய மாணவர்களின் கல்வி உரிமைக்காக நான் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதப் போராட்டத்தை தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தற்காலிகமாக வாபஸ் பெறுகிறேன்.

தமிழ்நாட்டில், குறிப்பாக மாணவர்களின் கல்வி உரிமை மற்றும் கனவுகளை கெடுக்கும் விதமாக ஒன்றிய பாஜக அரசு செயல்பட்டு வருகிறது.

இதை மக்களுக்கு வெளிப்படுத்தும் நோக்கில் கடந்த நான்கு தினங்களாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தேன்.

தற்போது இந்தப் போராட்டம் பேசுபொருளாகியுள்ளது. பரவலான ஆதரவையும் பெற்றுள்ளது.

இருப்பினும், பாஜக அரசு இன்னமும் தமிழ்நாட்டு மக்களின் நியாயமான கோரிக்கைகளை செவிமடுக்க மறுக்கிறது.

ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் நிலையிலும், பாஜக அரசு தனது அதிகாரத்தையும் அகங்காரத்தையும் தொடர்ந்து வருகிறது.

தமிழர்களுக்கு எதிரான இந்தச் செயல்பாடுகளை தமிழர்கள் கவனித்துக்கொண்டே வருகிறார்கள்.

ஆரம்பத்திலிருந்தே தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே பாஜக கடைப்பிடித்து வருகிறது. இது இந்தப் போராட்டத்தின் தொடக்கத்திலேயே எனக்கு நன்கு தெரிந்தது.

உரிமைகளைப் பாதுகாக்க வரும் நாள்களில் தமிழ்நாட்டு மக்கள் பாஜக அரசுக்கு எதிராக முன்வந்து போராட வேண்டும்.

மக்களின் நலனுக்காக மேற்கொள்ளவிருக்கும் எதிர்காலப் போராட்டங்களுக்கு இந்தப் போராட்டம் முன்னோடியாக இருக்கும்.

மக்களின் பிரச்சினைகளுக்காக போராடுவது, அவர்களின் பிரச்னைகளை எதிர்த்து நிற்பது, சமூக ஏற்றத்தாழ்வுகளை கலைப்பது என்பவை காங்கிரஸ் கட்சியின் அடிப்படை கொள்கைகள் ஆகும்.

வரலாறெங்கிலும் காங்கிரஸ் இப்படியான ஏராளமான போராட்டங்களை முன்னெடுத்துள்ளது. காங்கிரஸ் பணியாளராக நான் இந்த உண்ணாவிரதத்தை முன்னெடுத்தேன். நம் முன் நிற்கும் போராட்டம் நீண்டதும், பெரிதுமாக இருந்தாலும், அதை ஒற்றுமையாக முன்னின்று நடத்த வேண்டும்.

என்னுடைய உடல்நிலையை முன்னிட்டு, மருத்துவர்கள், இந்தியா கூட்டணியின் தலைவர்கள், பிற கட்சிகள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த நண்பர்கள், நலன்விரும்பிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளேன்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் கமிட்டியின் பொது செயலாளர் K.C. வேணுகோபால் ஆகியோரும் போராட்டத்தை கைவிடுமாறு கேட்டுக்கொண்டனர்.

இவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப, தற்காலிகமாக உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.




**கடலூர் மாவட்டம், சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சிதம்பரம் அருகே பு.முட்லூர் இஸ்லாமியர் பகுதியைச் சேர்ந்த ஹேக் சுல்தான் (16), லில்லிஸ் (16) பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவர்கள் கடந்த 30–ம் தேதி ஏரியில் குளிக்க சென்ற போது தண்ணீர் மூழ்கி பலியாகிவிட்டனர். சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன் அவர்கள் (03–09–2025) அவர்களது இல்லத்திற்கு நேரில் சென்று அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி, தலா 50,000 ரூபாய் நிதியுதவி வழங்கினார்.**

## முதல்வர் ஸ்டாலின் கையில் உள்ள காவல்துறை

# மக்களை காக்கவா! காக்கிகளை காக்கவா?

## விபத்தோ, பிற மரணமோ போலீசார் அலட்சியத்தால் பிரேத பரிசோதனை அறை முன் இறந்தவர் உடலை பெற நான்கு நாட்களாக காத்து கிடக்கும் அவலம்..



தமிழகத்தில் காவல்துறை செயல்பாடுகளால் நாளுக்கு நாள் மக்கள் மத்தியில் மதிப்பு குறைந்து வருவதை நாடு அறியும் இந்த நிலையில் காவல்துறை உங்கள் நண்பன் என்ற போலீசாரின் விளம்பரத்தை பொய்யாக்கும் செயல்கள் அங்கொன்றும் இங்கொன்றும் அதிகரிக்கப்பதை காண முடிகிறது.

இது ஓர் புறம் இருக்க, தமிழகத்தில் சாலை விபத்துகள், இன்னும் பல விபத்துகளால் காயம் அடைந்தவர்கள் அவசர மருத்துவ உதவி பெறவும் அரசு அல்லது தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று பின் மருத்துவர்கள் பரிந்துரை படி உயிர் காக்க மேல் சிகிச்சை பெற அவசர, அவசரமாக பெரிய மருத்துவமனைகளை நாடி செல்வார்கள். அரசின் மருத்துவமனை, மற்றும் உயிரை காக்க பணத்தை செலவு செய்து தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவார்கள். அப்படி மருத்துவ சிகிச்சை பெற்றும் உயிரிழந்தவர்கள் உடலை காவல்துறைக்கு தகவல் தெரிவித்து விடுவார்கள். அதன்படி இறந்தவர்களின் உடலை போலீஸ் பெற்று அரசு மருத்துவமனையில் உள்ள உடற்குறு ஆய்வுக்கு, பிரேத பரிசோதனை செய்ய கொண்டு செல்லுவார்கள். அங்கே உள்ள பிரேத பரிசோதனை மருத்துவ குழு, முதலில் போலீசாரிடம் AR ரிப்போர்ட்டை அதாவது ஆண்டி மார்ட்டம் (Anty Mor—tem) இறந்தவரின் இறப்புக்கு முன் ஏற்பட்ட காயங்கள் குறித்த அறிக்கை கேட்பார்கள். அந்த அறிக்கையை விபத்தில் இறந்த நபர் சிகிச்சை பெற்ற மருத்துவமனையில் இருந்து பெற்று தர வேண்டியது காவல்துறையின் பணி, ஆனால் இதை செய்ய போலீசார் என்னவோ அலைகழிப்பு செய்து காலதாமதம் படுத்தி இறந்தவரின் குடும்பத்தினரை பிரேத பரிசோதனை அறை முன் இரண்டு, மூன்று நாட்கள் காக்க வைக்கின்றனர். இதனால் மிகுந்த மன உளைச்சல் ஏற்படுவதாக குற்றச் சாட்டுகள் எழுவதை காண முடிகிறது.

இதை விட கொடுமை என்ன வென்றால் விபத்து நடந்த இடமும், விபத்தில் காயம் பெற்றவர்கள் சிகிச்சை பெற்ற இடமும் வெவ்வேறு காவல் நிலைய எல்லையில் என்றால் அவ்வளவு தான் காவல் நிலையங்கள் இடையே நடக்கும் அக்கபோரால், அப்பாவிமக்கள் தான் அவதி படுவார்கள் என்பதை அறியாத

காவல்துறை அதிகாரிகள் இதற்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பத்தினர் கூறியதாவது, எங்க அண்ணன் வெளியூரில் உள்ள உறவினர்களை பார்த்து நலம் விசாரிக்க வாகனத்தில் சென்ற போது சாலை விபத்தில் சிக்கி பெரும் காயம் ஏற்படுகிறது, உடனே அருகே உள்ள அரசு மருத்துவ மனையில் முதலுதவி சிகிச்சை பெற்றார், சிகிச்சை பெற்ற மருத்துவ மனை கிராமத்தின் சின்ன மருத்துவ மனை என்பதால், விபத்தில் சிக்கியவரின் உயிரை காக்க மேல்சிகிச்சை பெற பக்கத்துல உள்ள பெரிய மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம், ஆனால் இரண்டு நாட்கள் சிகிச்சைக்கு பிறகு உயிரிழந்து விட்டார், விபத்தில் சிகிச்சை பெற்றவர் என்பதால் போலீசார் மூலம் உடலை பிரேத பரிசோதனை செய்ய எடுத்து சென்றனர்.

அதற்கு பிறகு தான் போலீசாரின் வேலையே ஆனால் அதனை மனிதநேயத்துடன் கூட செய்ய முன் வராமல் காலம் தாழ்த்துவது கொடுமையிலும் கொடுமை இதை எங்கே போய் சொல்லுவது, உடலை பிரேத பரிசோதனை செய்யும் முன்னர் மருத்துவர்கள் கேட்ட AR ரிப்போர்ட்டை போலீசார் தான் முதலில் சிகிச்சை பெற்ற மருத்துவமனையில் இருந்து வாங்கி தரனும் என்பது அவங்க மரபு அதை கொடுத்தால் தான், மருத்துவர்கள் உடலை பிரேத பரிசோதனையின் போது விபத்து காயங்களை கண்டு அறிந்து அதற்குரிய காரணங்களை ஆய்வு செய்து பின் பிரேத பரிசோதனை அறிக்கையை தருவாங்க, ஆனால் இந்த போலீஸ் காரங்க நான்கு நாட்களாக பிரேத அறை முன்னே இரவு பகலும் காக்க வைக்கிறாங்க, இதுல விபத்து நடந்த இடமும், சிகிச்சை பெற்று இறந்த இடமும் காவல்நிலைய எல்லை வேறவேற என்றால் அவ்வளவு தான் நம்பல பைத்தியம் ஆக்கிவிடுங்க இந்த போலீஸ், மனித நேயத்துடன் செய்ய வேண்டிய வேலையை போலீசார் அலைகழிப்பு செய்வது என்ன நியாயம், விபத்தில் இறந்தவர் உடலை

**போலீஸ் கடமைக்கு பணி செய்கிறதா, கடமையை செய்ய தவறுகிறதா ?**




பிரேத பரிசோதனை செய்யும் முன் இது போன்ற தகவல்களை ஒப்படைக்கனும் என்பது எங்களுக்கு தெரியுமா, நான்கு நாட்கள் கழிச்சு பிரேத அறையில் இருந்து உடலை வாங்கும் போது எங்க உசுரே போச்சு என கண்ணீர் விட்டு அழும் அவலத்தை காண மனம் இல்லாமல் கலங்கி நின்றோம்.

முதல்வர் ஸ்டாலின் கையில் வைத்திருக்கும் காவல்துறை யை மக்கள் நலன் காக்க இது போன்ற காவல் நிலைய செயல்பாடுகளை தவிர்க்க, வெள்ளைக்காரன் விட்டு சென்ற காவல் சட்டத்தை திருத்தம் செய்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினால் நன்மை கிடைக்கும், எத்தனையோ திட்டங்களை கொண்டு வரும் முதல்வர் ஸ்டாலின் இது போன்ற மக்கள் பயன் பெறும் வகையில் விபத்தில் இறந்தவர் உடலை பெற காவல்நிலையங்களை ஒருங்கிணைத்து ஆன்லைன் முறைகளை நடைமுறை படுத்த சட்டம் கொண்டு வந்தால் இறந்தவர்களின் ஆன்மா சாந்தி அடையும், அவரது குடும்பத்தினரும் நன்றி கூறுவார்கள் வரும் சட்டமன்ற கூட்டத்தில் இதற்கு முன் வடிவம் தருவாறா பார்க்கலாம்.

இனியாவது காவல்துறை அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுத்தால் நல்லது இல்லை என்றால் காவல்துறையினரை பொதுமக்கள் திட்டுவது நியாயம் என்பது ஆகிவிடும், கண் திறந்து பாருங்க ஆபீசர்..

# மின் இணைப்பு பெயர் மாற்றத்துக்கு கூடுதல் ஆவணங்கள் தேவையில்லை

ஒருவர் பெயரில் உள்ள மின் இணைப்பை, வேறு நபரின் பெயருக்கு மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் நடைமுறையை, மின் வாரியம் எளிமையாக்கி உள்ளது.

தமிழகம் முழுதும் மின் வினியோகம் செய்யும் பணியை, மின் வாரியம் மட்டுமே மேற்கொள்கிறது. ஒருவர் பெயரில் உள்ள மின் இணைப்பு, சொத்து விற்பனை, மின் நுகர்வோர் உயிரிழப்பு காரணமாக, வேறு நபரின் பெயருக்கு மாற்றம் செய்யப்படுகிறது.

இந்த சேவைக்கு, மின் வாரிய இணையதளத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும். மின் இணைப்பு பெயர் மாற்றத்துக்கு, 'நோட்டரி' உள்ளிட்ட பல்வேறு ஆவணங்களை கேட்டு, அலைக்கழிப்பதாக புகார்கள் எழுந்துள்ளன. இதையடுத்து, அந்த சேவை தற்போது எளிமையாக்கப்பட்டு உள்ளது.

அதன் விபரம்: சொத்து விற்பனையின் கீழ், மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய, சொத்து விற்பனை பத்திரம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது நீதிமன்ற உத்தரவு ஆகிய ஏதேனும் ஒன்றுடன், உறுதிமொழி படிவம் சமர்ப்பிக்க வேண்டும்.

உயிரிழந்த நபரின் பெயரில் உள்ள மின் இணைப்பை மாற்ற, தாசில்தார் வழங்கிய வாரிசு சான்று அல்லது உள்ளாட்சி சொத்து வரி ரசீது, ஆகிய ஏதேனும் ஒன்றுடன் காப்புறுதி, பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஆவணங்களை பெற்று, மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்து தர வேண்டும். 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில், மின் இணைப்பு பெயர் மாற்றம் கோரி வரும் விண்ணப்பங்களுக்கும், இதே நடைமுறையை பின்பற்றவும் என, மாவட்ட மேற்பார்வை பொறியாளர்களுக்கு, மின் வாரியம் உத்தரவிட்டு உள்ளது.

# ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளை.. தடுக்க சிறப்புக் குழு அமைப்பு

வார இறுதி மற்றும் பண்டிகை தினங்களில் தொடர் விடுமுறை காலங்களில் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதை தடுக்கும் வகையில் சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

மிலாடி நபி, ஓணம் பண்டிகையை ஒட்டி சென்னையில் இருந்து சொந்தவூர் செல்ல பொதுமக்கள் திட்டமிட்டு வருகின்றனர். தமிழகத்தில் தனியார் ஆம்னி பேருந்துகளில் இதுபோன்ற பண்டிகை மற்றும் தொடர் விடுமுறை நாட்களில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதாக புகார்கள் எழுகிறது. இந்நிலையில் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்வதை தடுக்கும் வகையில் சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது. தமிழகம் முழுவதும் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள்,




போக்குவரத்து சோதனைச் சாவடி ஆய்வாளர்கள் உள்ளிட்டோர் கொண்ட சிறப்புக் குழுவானது அமைக்கப்பட்டுள்ளது.

ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூலித்தல் மற்றும் அனுமதி இல்லாமல் இயங்கும் ஆம்னி பேருந்துகளில் தீவிரமாக சோதனை செய்து அவ்வாகனங்களை சிறை பிடித்து அபராதம் விதிக்கவும் நடவடிக்கை எடுக்கவும் இந்த சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து ஆணையர் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.




# தேனை பார்வை பத்திரிகையின் ஐந்தாம் ஆண்டு துவக்க விழா




*31.08.2025* ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னையில் நடைபெற்ற தேனை பார்வை பத்திரிகையின் ஐந்தாம் ஆண்டு துவக்க விழா, மற்றும் ஜனநாயக தூண் பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு துவக்க விழா ஆசிரியர் திரு.டாக்டர்.நா.சரண்குமார். அவர்களின் தலைமையில் சென்னை அடையார் யூத் ஹாஸ்டலில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்கள் திரு.V.S.இராமன். (மூத்த பத்திரிகையாளர்), புரட்சித் தமிழச்சி மூ.ராஜேஸ்வரி பிரியா. (அனைத்து மக்கள் அரசியல் கட்சி நிறுவனத் தலைவி). திரு. செங்கை பத்மநாபன். (நமதுரிமை காக்கும் கட்சி தலைவர்),செ. வினோத்குமார், MBA., B.L., (வழக்கறிஞர் உச்சநீதி மன்றம்), திரு.D.S.R.சுபாஷ்.(தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கம் தலைவர்), திரு.எஸ்.சரவணன். (நமது நகரம் பத்தரிகை ஆசிரியர்), திரு.V.யுவராஜ். (மாநில துணை தலைவர் வின் பத்திரிகையாளர் சங்கம்), திரு.P.செல்லபாண்டியன்.B.SC., (மாநில தலைவர் தமிழ்நாடு மது குடிப்போர் விழிப்புணர்வு



சங்கம்), திரு.முனைவர் அயன்புரம் பாபு.BBA.,LLB., (CEO பைட்டிங் பிரதர்ஸ் நியூஸ்), திரு.தருமராஜா. (மக்கள் விருப்பம் பத்திரிகை ஆசிரியர்), திரு. மதிஒளி ராஜா. (FACE NEWS பத்திரிகை ஆசிரியர்), திரு.J.கணேஷ்பாண்டியன்.(நீதியின் நுண்ணறிவு), திரு.V.மாதவன்.(நீதியின் நுண்ணறிவு), திரு.V.பாலமுருகன். (அரசுமலர்), திரு.M.ராஜாமணி. (உதயநிதிகுரல்) திரு.M.நெல்சன். (REPUBLIC FAMILY TODAY), மற்றும் மூத்த பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், பத்திரிகை நிருபர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

புதுக்கவிதை



# அறமிருக்கும் மனத்தில் அனைவருக்கும் திறமிருக்கும்

அயோத்தி அரசன் அரிச்சந்திரன் வாய்மையால்
ஆக்கிய வரலாற்றை செதுக்கிய காவியம்

சந்திரமதி மனைவி லோகிதாசன் பாலகன்
சந்தோஷமாய் வாழ்ந்த பெருமைக்குரிய அரசன்

தேவலோக இந்திரன் விசுவமித்திரரை அனுப்பி
உண்மையை உயிராக வாழ்ந்தவரை சோதிக்க

பூலோகம் வந்தவரோ யாகத்திற்கு பொருள்கேட்க
சம்மதித்தவருக்கு வனவிலங்குகளால் நாட்டை அழிக்க

காரணமான விலங்குகளை காட்டினில் அழிக்க
காட்டுபன்றி முனிவரிடம் காயம்பட்டதை முறையிட

கோபம்பட்டுகேட்ட முனிவரிடம் நாட்டை அர்ப்பணிக்க
கேட்டபொருளையும் நாட்டுக்கப்பால் தருவதாக வெளியேற

காசியிலே அந்தணனிடம் மனைவிமகனை அடிமையாக்க
அனுப்பிய சுக்கிரனிடம் பொருளை ஒப்படைக்க

கூடவந்தவனுக்கு கூலியாக வீரபாகுவிடம் தன்னைவிற்க
மயானத்தை காத்தான் பொய்சொல்லா புனிதன்

பெற்றமகனை காட்டிலே பாம்புதீண்டி இறக்க
புதைக்க கூலிதராததால் மனைவியை தடுக்க

உண்மையை சோதித்த விசுவாமித்திரர் ஒத்துகிட
மீண்டும் மனைவிமகனோடு அயோத்தியை அரசாள



- சி.சுபாஷ் சந்திர போஸ்,
காவல்துணைக்கண்காணிப்பாளர் (ஓய்வு)

# நீலாங்கரை பகுதியில் காரில் சென்று, கொள்ளை சம்பவத்தில் ஈடுபட முயன்ற 5 நபர்கள் கைது. 1 கார் பறிமுதல்..!

**சென்னை பெருநகர காவல், J–8 நீலாங்கரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அக்கரை சோதனை சாவடியில் காவல்குழுவினர் (02.09.2025) வாகனதணிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்தபோது, கிழக்கு கடற்கரை சாலை வழியாக வந்த ஒரு காரை நிறுத்தி, காரில் வந்த 5 நபர்களிடம் விசாரணை செய்தபோது, அவர்கள் முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்தனர். சந்தேகத்தின்பேரில், அவர்கள் வந்த காரை சோதனை செய்தபோது, காரில் கொள்ளை சம்பவத்தில் ஈடுபடுவதற்காக 3 கத்திகள் மற்றும், அவர்கள் வந்த காரின் பதிவெண்ணை மாற்றி வைத்திருந்தது தெரியவந்தது.**




அதன்பேரில் மேற்படி 5 நபர்களையும் அவர்கள் வந்த காருடன் காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை செய்தனர். J—8 நீலாங்கரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணையில், மேற்படி பிடிபட்ட 5 நபர்களும் சேர்ந்து, கிழக்கு கடற்கரை சாலை வழியாக நடந்து செல்லும் பொதுமக்களிடமிருந்து பணத்தை கொள்ளை அடிக்க திட்டமிட்டு, காரின் பதிவெண்னை மாற்றி கத்திகளுடன் சென்று கொண்டிருந்தது தெரியவந்தது.










அதன்பேரில், J—8 நீலாங்கரை காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, கொள்ளை சம்பவத்தில் ஈடுபட முயன்ற எதிரிகள் 1.உதயநிதி (எ) சூர்யா, வ/29, திடீர்நகர், மதுரை மாவட்டம், 2.விக்னேஷ்வரன், வ/28, நாமக்கல் மாவட்டம், 3.ஆரிப்லால், வ/32, தியாகதுருவம், கள்ளக்குறிச்சி மாவட்டம், 4.அருண், வ/30, இதயமேலூர், சிவகங்கை மாவட்டம், 5.ராம்குமார், வ/28, பூவந்தி, சிவகங்கை மாவட்டம் ஆகிய 5 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 கார், 3 கத்திகள் மற்றும் 2 போலி நம்பர் பிளேட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி உதயநிதி (எ) சூர்யா மீது ஏற்கனவே 1 கொலை, அடிதடி, திருட்டு உட்பட 5 குற்ற வழக்குகளும், எதிரி விக்னேஷ்வரன் மீது 1 கொலை, வழிபறி, அடிதடி உட்பட 6 குற்ற வழக்குகளும், எதிரி ஆரிப்லால் மீது 1 கொலை உட்பட 2 குற்ற வழக்குகளும், எதிரி அருண் மீது 1 கொலைமுயற்சி உட்பட 2 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட 5 எதிரிகளும் விசாரணைக்கு பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# ஜிஎஸ்டி 2.0

# தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு வரவேற்கும், வலியுறுத்தும் அம்சங்கள்



தனிநபர் ஆயுள், மருத்துவ காப்பீடுகளுக்கு வரிவிலக்கு உள்ளிட்ட ஜிஎஸ்டி சீரமைப்பு நடவடிக்கைகளுக்கு தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு வரவேற்பு தெரிவித்துள்ளார். அதேவேளையில், மாநிலங்களின் வருவாய் வாய்ப்புகள் பாதிக்கப்படாமல் இருக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அவர் வலியுறுத்தினார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: டெல்லியில் 2 நாட்கள் நடைபெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஜிஎஸ்டி) மன்றத்தின் 56—வது கூட்டத்தில் தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று, தமிழக அரசின் சார்பில் கருத்துகளை எடுத்துரைத்தார். அப்போது அவர், தனிநபர் ஆயுள் காப்பீடு மற்றும் தனிநபர் மருத்துவ காப்பீடு சேவைகளுக்கு வரிவிலக்கு உள்ளிட்ட ஜிஎஸ்டி சீரமைப்பு நடவடிக்கைகளுக்கு வரவேற்பு தெரிவித்தார்.

அதேநேரம் மாநில வருவாய் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். அரசியலமைப்பு திருத்தம் மூலம் தற்போதைய மேல்வரியை தொடரலாம் அல்லது ஜிஎஸ்டி சட்டத் திருத்தம் மூலம் உடல்நலத்துக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களுக்கு மட்டும் உச்ச வரி வரம்பினை அதிகரிக்கலாம் என்றும் பரிந்துரைத்தார்.

ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி தீர்வு நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கு, அலுவலர்கள் குழுவின் அறிக்கையை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். இக்குழுவின் பரிந்துரைகளை இந்த ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் செயல்படுத்த ஜிஎஸ்டி மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஏற்றுமதி மற்றும் தலைகீழ் வரி அமைப்பின் கீழ் தற்காலிகமாக ஜிஎஸ்டியை திரும்பப் பெறுவதற்கான தானியங்கி வழிமுறை, வணிகம் செய்வதை எளிமைப்படுத்துவதற்கான, சிறு இடர் அளவுரு கொண்ட வணிகங்களுக்கு எளிதாக்கப்பட்ட பதிவு முறையினையும் அமைச்சர் தங்கம் தென்னரசு வரவேற்றார்.



உடல்நலத்துக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்களுக்கு இழப்பீட்டு மேல்வரி விதிக்கும் காலத்தை அக்டோபர் முதல் 2 அல்லது 3 மாதங்களுக்கு நீட்டிக்க சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் பரிந்துரைத்துள்ளது.

எனவே, தமிழக அரசின் பரிந்துரைகளை ஜிஎஸ்டி மன்றம் பரிசீலிக்கும் என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில், நிதித்துறை செயலர் த.உதயசந்திரன், தகவல் தொழில்நுட்வியல் துறை செயலர் பிரஜேந்திர நவ்னிட், வணிகவரி ஆணையர் எஸ்.நாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்ட சமூக வலைதளப் பதவில், “புதுடெல்லியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நேற்று நடைபெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 56—வது கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழகத்தின் சார்பில் கருத்துகளை முன்வைத்தேன்.

உயிர் காக்கும் மருந்துகள், ஆயுள் காப்பீடு, அத்தியாவசிய பொருட்கள் பலவற்றிற்கும் வரிக் குறைப்பு செய்யப்பட்டுள்ளதை வரவேற்கின்ற அதே சமயத்தில், மாநிலங்களின் வருவாய் வாய்ப்புகள் பாதிக்கப்படாமல் இருக்கும் வண்ணம் அரசியல் சட்டத் திருத்தத்தில் மாற்றம் கொண்டு வரவோ அல்லது வேறு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தினேன்.

மேலும், ஏற்றுமதி மற்றும் தலைகீழ் வரி அமைப்பின் ( Inverted Duty Structure) கீழ் தற்காலிகமாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை திரும்பப் பெறுவதற்கான (Provisional Refund) தானியங்கி வழிமுறையை வரவேற்றுப் பேசியதோடு, ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தீர்வு நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கு, அலுவலர்கள் குழுவின் அறிக்கையை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினேன்” என்று அவர் கூறியுள்ளார்.

---

### குடிமைபணிகள் தேர்வில் வெற்றிபெற்று

# துணை காவல் கண்காணிப்பாளராக பணி நியமன ஆணை பெற்ற காவல் ஆய்வாளருக்கு பாராட்டு

சென்னை பெருநகர காவல், நவீன காவல் கட்டுப்பாட்டு அறையில் பணிபுரிந்து வரும் காவல் ஆய்வாளர் திரு.S.ராமலிங்கம், 2011 ஆம் ஆண்டு நேரடி காவல் உதவி ஆய்வாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்டம், சென்னை அம்பத்தூர், மத்தியகுற்றப்பிரிவு, நவீன காவல் கட்டுப்பாட்டு அறை பிரிவுகளில் பணிபுரிந்து 2025ம் ஆண்டு காவல் ஆய்வாளராக பதவி உயர் பெற்றார்.

காவல் ஆய்வாளர் துறை அனுமதியுடன் கடந்த 2024ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வில் கலந்து கொண்டு, தேர்வில் வெற்றி பெற்று 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் துணை காவல் கண்காணிப்பாளர் பதவிக்கு தேர்வு பெற்று பணிநியமன ஆணை பெற்றுள்ளார். (04.09.2025) காவல் துறையில் சிறப்பாக பணிபுரிந்து கொண்டு, தொடர்ச்சியாக ஊக்கத்துடன் பல்வேறு உயர் பதவிகளுக்கான அரசு தேர்வுகளில் பலமுறை கலந்து கொண்டு, தேர்ச்சி பெற்றும் இறுதியாக காவல் துறையில் துணை காவல் கண்காணிப்பாளர் பதவிக்கு




தேர்ந்தெடுக்கப்பட்டு பணி நியமன ஆணை பெற்று, 07.09.2025 முதல் பணிப்பயிற்சிக்கு அறிக்கை செய்ய உள்ள காவல் ஆய்வாளர் திரு.S.ராமலிங்கம் அவர்களை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப அவர்கள் நேரில் அழைத்து வெகுமதி வழங்கி பாராட்டினார்கள். இந்நிகழ்ச்சியில் நுண்ணறிவுப்பிரிவு துணை ஆணையர் திரு.M.ராமமூர்த்தி அவர்கள் உடனிருந்தார்.

# தமிழக அரசுக்கு கிடைத்த மிகப்பெரும் சொத்து..!

# பிரியங்கா பங்கஜம் ஐஏஎஸ்

**பிரியங்கா பங்கஜம் ஐஏஎஸ் அவர்கள் தஞ்சை மாவட்ட மக்களுக்கு கிடைத்த ஒரு நல்ல ஆட்சியர். எவ்வளவோ அரசு உயர் அதிகாரிகள் இருந்தாலும் இவரைப்போல் மக்கள் மனம் கவர்ந்தவர் வேறு எவரும் இல்லை. மக்களிடம் அவர் அனுகுமுறை, எளிமை அறிவுள்ள எவரையும் கவரக்கூடியதுதான் "கற்றாரை கற்றாரே காமுறுவர்" தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் பணியாற்றி அனுபவம் பெற்றவரை 2024ம் ஆண்டு தஞ்சை மாவட்ட கலெக்டராக தமிழ்நாடு அரசு அறிவித்தது.**



இந்திய நிர்வாகப் பணியின் தமிழ்நாடு பிரிவைச் சேர்ந்த பொறியாளராக இருந்து அரசு ஊழியராக மாறிய இவர், பொது சேவை வழங்கலில் மக்களை மையமாகக் கொண்ட மற்றும் நிலையான தீர்வுகளைக் கண்டறிவதில் உறுதியாக நம்பிக்கை கொண்டவர் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் முக்கிய நற்பண்புகளாக இரக்கம், பச்சாதாபம் மற்றும் கருணை ஆகியவற்றை நிலைநிறுத்துகிறார். கலெக்டராக பொறுப்பேற்றதுமே, தஞ்சை மாவட்ட மக்களிடம் கலெக்டர் பிரியங்கா பேசிய வார்த்தைகள் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியது பொதுமக்களிடம் பிரியங்கா சொல்லும்போது, "தஞ்சை மாவட்டம் விவசாயப் பகுதியாகும்.. எனவே, விவசாயிகளுக்கு தேவையான நலத்திட்ட உதவிகள் அனைத்தையும் பெற்று தர பாடுபடுவேன், "விவசாயம் நிறைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கான அரசின் நலத்திட்ட உதவிகள் அனைத்தும் ஒவ்வொரு விவசாயிக்கும் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.. குறைதீர்க்கும் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மீது உடனடியாக உரிய தீர்வு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொதுமக்கள் வழங்கும் கோரிக்கை மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்படும் என்றும் கூறினார். "பொதுமக்கள் கொடுக்கும் ஒவ்வொரு மனுக்களையும் தீர்த்து வைக்க போதிய அறிவுரைகள் வழங்கப்படும்" என்று வெறும் பேச்சளவில் மட்டும் இல்லாமல் அதிகாரிகளிடம் ஒவ்வொரு கோரிக்கை மனுக்கள் மீதும் பொதுமக்களின் ஆயிரம் கண்ணீர் துளிகள் இருப்பதால், அதை அனைவரும் சிரித்த முகத்துடன் பணிகளை செய்ய வேண்டும்... மறுபடியும் மறுபடியும் ஒரே மனுக்கள் வருவதை தடுக்கவேண்டும்" என்று அறிவுறுத்தினார் என்றும் தெரிய வருகிறது.

கலெக்டராக பொறுப்பேற்றதுமே, முதல் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.. இதில், இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, ரேஷன்

கார்டு, உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 410 மனுக்களை மாவட்ட மக்கள் கலெக்டரிடம் வழங்கினார்கள். அவைகளை பெற்றுக்கொண்ட கலெக்டர், அதன்மீது உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அரசின் நல திட்டங்கள் எல்லாருக்குமே உடனடியாக கிடைக்க நடவடிக்கை, சட்டத்துக்கு புறம்பாக செயல்படுபவர்கள் மீது பாரபட்சமின்றி கடும் நடவடிக்கை, முக்கியமாக விவசாயத்துக்கும், கிராமப்புற மக்கள் முன்னேற்றத்துக்கும் முக்கியத்துவம் என அசத்தி வருகிறார். அதேபோல, தஞ்சை மாவட்டத்தில் 40 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது முறையாக பெண் ஆட்சியராக பொறுப்பேற்ற பிரியங்கா அதே மண்ணைச் சேர்ந்தவர் என்பது கூடுதல் பெருமையான விஷயமான இருப்பதால் டெல்டாவின் துயரை நன்கு அறிந்து வைத்திருப்பார், நிச்சயம் அனைத்து சவால்களையும், சிக்கல்களையும் சமாளிப்பார் என்று மாவட்ட மக்களின் உறுதியான நம்பிக்கையை பெற்றுள்ளார்.

ஒரு முறை மனு கொடுக்க வந்த பெண் காலில் செருப்பை கழட்டி விட்டு நின்ற போது, 'எதற்காக செருப்பை கழட்டினீர்கள்? போடுங்கள்...'என்று சொல்லி சமத்துவத்தை கற்றுத் தந்தார். இப்படி, தான் செய்யும் ஒவ்வொரு செயல்களிலும் அறத்தை முன்நிறுத்தும் பிரியங்கா பல குறைதீர்க்க முகாம்களில் பங்கு பெற்று வெகுவான பொதுமக்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற பல நடவடிக்கைகள் எடுத்து இருப்பது குறிப்பிடத்தக்கது. அதிலும் குறிப்பாக ஒரத்தநாடு அருகே மூதாட்டி இருவருக்கு ஒரு மணி நேரத்தில் பட்டா ஏற்பாடு செய்து அவர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தில் வீடு ஒதுக்கீடு போன்ற பல நெகிழ்ச்சிகரமான சம்பவம் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. கலை ஆர்வம் மிக்க இவர் கலைப் படைப்புகளை பாராட்டுவதில் எப்போதும் தவறியதில்லை. கலை பண்பாட்டு துறை மூலம் நடத்தப்படும் கண்காட்சியில் பங்கு கொண்டு அனைத்து கடைப்படைப்புகளையும் கண்டு கலை படைப்பினர்களை பாராட்டியதோடு மட்டுமல்லாமல் தனது உருவப் படத்தை ஓவியமாக கொண்டு வந்த இருவரை பாராட்டி அவர்களின் ஓவியத்தை பெற்று மகிழ்ந்தார்.

பேச்சில் மரியாதை, மக்களின் கோரிக்கைகளை கேட்டு தீர்வு காண்பதில் கண்ணியமிக்கவர் என்று தஞ்சாவூர் மாவட்ட மக்களை தன்னுடைய செயல்பாடுகளால் மகிழ்ச்சியடை வைத்துள்ளார் பிரியங்கா பங்கஜம்.

பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்துவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் இவர், தஞ்சாவூர் மாவட்டப் பள்ளி மாணவர்களுக்கு முன்மாதிரியாக திகழ்கிறார். மக்கள் குறை தீர்வு கூட்டத்திற்கு சாலை மற்றும் பேருந்து வசதி கோரி கவனத்தை ஈர்ப்பதற்காக பள்ளிச் சீருடையில் மாணவர்களை அழைத்து வந்தவர்களை கடுமையாக சாடினார். பள்ளி செல்லும் மாணவர்களின் நேரத்தை வீணடித்தால் FIR போட்டு வழக்கு பதிந்துவிடுவேன் என்று பெற்றோரையும், கவுன்சிலரையும் எச்சரித்ததோடு மட்டும்மல்லாமல் ஆளும் கட்சியாக இருந்தாலும் யோசிக்காமல் செய்த தவறுக்காக நோட்டீஸ் அனுப்புவேன் என்று கூட்டத்திலேயே கூறினார். இதுபோன்று தஞ்சையை சார்ந்த நாடளுமன்ற உறுப்பினர் முரசொலி அவருக்கு தேவைப்பட்ட அனுமதிகள் உரிய வரைமுறைக்கு உட்படாமல் இருந்ததன் காரணத்தால் மறுக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்தவர் அதிகாரிகளை ஒருமையில் சாடினார். இருப்பினும் உருட்டல் மிரட்டலுக்கு அடிபணியாமல் கட்சி வேறுபாடு இன்றி அனைவரிடத்திலும் நேர்மையாக நடந்து கொண்டதன் விளைவாக இவர் மீது கவர்னர் அலுவலகத்தில் நடவடிக்கை எடுக்க கூறி மனுக்கள் பெறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் அவற்றை கருத்தில் கொள்ளாமல் தொடர்ந்து நேர்மையான பணியாற்றுவதோடு தனக்கு கீழ் தனது கட்டுப்பாட்டில் உள்ள கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களை தொடர்ந்து ஊக்கப்படுத்தி அவர்கள் திரம்பட செயலாற்ற முக்கிய காரணமாக மாவட்ட ஆட்சியர் திகழ்கிறார்.

மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நடத்தப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய ஆட்சியர் பிரியங்கா "நகையை அடமானம் வைத்து என்னுடைய அம்மா என்னை படிக்க வைத்தார். என்னுடைய அம்மாவை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும், அவரை பெருமைப்பட வைக்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பமாக இருந்தது. சின்ன வயசுலேருந்து என்னவாக வேண்டும் என்கிற திட்டம் எல்லாம் எனக்கு இருந்தது இல்லை. எங்க அம்மா சந்தோஷப்படவேண்டும், அவங்க பொண்ணு நான்னு எல்லோரும் சொல்றத அவங்க கேட்கனும்னு நெனைச்சேன். ஐஏஎஸ்

ஆனதுக்கு அப்புறம் என்னோட பேருக்கு பின்னாடி 'பங்கஜம்' எனும் அவருடைய பெயரை சேர்த்துக் கொண்டேன். பிரியங்கா ஐஏஎஸ் என்று போட்டுக் கொள்வதை விட என்னுடைய பெயரை 'பிரியங்கா பங்கஜம்' ஐஏஎஸ் என்று அம்மாவின் பெயரையும் சேர்த்து போட்டுக் கொள்வதே அவருக்கு நான் என்னுடைய நன்றிக்கடனை திரும்ப செலுத்தும் ஒரு வாய்ப்பாக கருதுகிறேன், என்று தெரிவித்து இருந்தார்.“ தொடர்ச்சியாக சத்துணவு மற்றும் மாணவர்களின் கல்வித்தரம் என எதையும் விட்டு வைக்காமல் சுழன்று வரும் இவரை சிறிவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் பிடித்திருப்பது ஆச்சரியம் இல்லை.

சமீபத்தில் முதலமைச்சர் திரு. மு க ஸ்டாலின் அவர்கள் மேடையில் பேசிய போது “தாயின் பெயரையும் சேர்த்து தாய்க்கு பெருமை தேடித்தந்த கலெக்டர் 'பிரியங்கா பங்கஜம்' ஐஏஎஸ் எளிமையான குடும்பத்தில் பிறந்து கடினமாக படித்து முன்னேறி சிறப்பாக பணியாற்றும் அவர்களுக்கும் அவரது கீழ் வேலை செய்யும் அனைத்து அரசு துறை அதிகாரிகளுக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவிப்பதாக' கூறியது இவர் மகுடத்தில் சேர்க்கப்பட்ட மற்றொரு வைரமாகும்.

மாணவர்கள் கல்வியில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும், கல்வி மட்டுமே ஒருவரின் நிலையை உயர்த்தும் என்பதை இளம் தலைமுறையினருக்கு உணர்த்தும் விதமாக தொடர்ந்து ஊக்கம் அளித்து தனது பணியை சீரும் சிறப்புமாக செய்து வரும் பிரியங்கா பங்கஜம் ஐஏஎஸ் அவர்களுக்கு சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிப்பது போல நமது குடும்பத்தின் சார்பாக நாமும் மென்மேலும் இவரது பணி சிறக்க வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் அரசுத்துறையில் வேலை வாங்கி தருவதாக கூறி ரூ.9.5 லட்சம் மோசடி..!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, தேசூர் பகுதியைச் சேர்ந்த சக்ரவர்த்தி, வ/41, த/பெ.சிங்காரவேலு என்பவர் பி.இ எலக்ட்ரிக்கல் என்ஜினியரிங் படித்து முடித்துள்ளார்.

கடந்த 2020ம் ஆண்டு சக்ரவர்த்தியின் நண்பர் மூலம் அறிமுகமான இராமாபுரம் பகுதியைச்சேர்ந்த அஞ்சுகம் என்பவர், மேற்படி சக்கரவர்த்தியிடம் அரசுத்துறையில் வேலை வாங்கி தருவதாக கூறி 6 தவணைகளாக ரூ.9.5 லட்சம் பணம் பெற்றுள்ளார். ஆனால் பேசியபடி வேலை வாங்கித்தராமலும், பணத்தை திரும்ப தராமலும் அஞ்சுகம் ஏமாற்றி வந்துள்ளார்.

இது குறித்து சக்ரவர்த்தி காவல் ஆணையாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாரின் பேரில் R—10 எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். R—10 எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், தீவிர விசாரணை செய்ததில் புகார்தாரர் குறிப்பிட்டிருந்தது உண்மையென தெரியவந்ததின்பேரில், ரூ.9.5 லட்சம் பணத்தை பெற்று மோசடி செய்த எதிரி அஞ்சுகம், பெ/49, திருமலைநகர், இராமாபுரம், சென்னை என்பவரை (03.09.2025) கைது செய்தனர். மேலும் விசாரணையில் அஞ்சுகம், இராமாபுரம் பகுதியில் ஜெராக்ஸ் கடை நடத்தி வருவது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி அஞ்சுகம் விசாரணைக்குப் பின்னர் (03.09.2025) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் பேரூராட்சிகளின் இயக்குநர் / மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.மா.பிரதீப்குமார், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் துறை சார்ந்த அனைத்து அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் இன்று (01.09.2025) நடத்தினார். அருகில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் திருமதி சி.ப்ரியங்கா, இ.ஆ.ப., அவர்கள், கோவில்பட்டி உதவி ஆட்சியர் (கோவில்பட்டி) திரு.ஹீமான்ஷீ மங்கள், இ.ஆ.ப., அவர்கள், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.தி.புவனேஷ்ராம், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உள்ளனர்.



தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.அரவிந்த் அவர்களின் தலைமையில் பொதுமக்களுக்கான சிறப்பு குறை தீர்ப்பு கூட்டம் மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடம் புகார் மனுக்களை பெற்று அவர்களின் குறைகளை கேட்டறிந்து தீர்வு வழங்கப்பட்டது. மேலும் பொதுமக்களின் புகார்களை விரைந்து விசாரணை செய்திட சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

# டி.எஸ்.பி, இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட 7 போலீசார் கூண்டோடு மாற்றம்

## அதிரடி காட்டும் ஐ.ஜி அஸ்ரா கார்க்!



ஏழை எளிய மக்கள், தொழிலாளர்கள் குடும்பங்களை சீரழித்து வரும் லாட்டரி சீட்டுகளுக்கு, தமிழ்நாடு அரசு, கடந்த 2003 ஆம் ஆண்டு தடை விதித்தது. ஒரு நம்பர் லாட்டரி சீட்டு எனப்படும் சுரண்டல் லாட்டரியால் நாசமாகி வரும் குடும்பங்களை காக்க, தமிழ்நாடு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அண்டை மாநிலமான கேரளா, வட மாநிலங்களில் லாட்டரி சீட்டு தடை செய்யப்படவில்லை. சில ஆண்டுகள் அமைதி காத்த லாட்டரி உரிமையாளர்கள், தற்போது மீண்டும் தீவிரமாக லாட்டரி சீட்டு விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர். அங்குள்ள லாட்டரி சீட்டுகளை கொண்டு வந்து, தமிழ்நாட்டில் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்தநிலையில், கடலூர் மாவட்டம் சிதம்பரம் பகுதியில் தொடர்ந்து லாட்டரி சீட்டு விற்பனை மற்றும் கள்ளத்தனமாக மது பாட்டில்கள், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக தொடர்ந்து பொதுமக்கள் மத்தியில் புகார்கள் குவிந்து கொண்டே இருந்தன. இதனை தொடர்ந்து, கடந்த சில நாட்களுக்கு முன்பு சிதம்பரம் நகரத்தைச் சேர்ந்த சம்புபாய் என்கிற நசீர் என்பவரை லாட்டரி சீட்டு விற்பனை செய்ததற்காக ஐ.ஜி. அஸ்ரா கார்க் உத்தரவின் பேரில், பண்ருட்டி டி.எஸ்.பி. ராஜா, மற்றும் தனிப்படை எஸ்.ஐ. ராஜா உள்ளிட்ட தனிப்படை டீம் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர். இந்த விசாரணையில் சம்புபாய் என்கிற நசீர், லாட்டரி சீட்டு விற்பனை செய்வதற்காக காவல்துறையில் யாரெல்லாம் உதவி செய்கிறார்கள், யாருக்கெல்லாம் மாமூல் கொடுத்துள்ளார் என்ற விபரம் தனிப்படை போலீசாருக்கு ஆதாரத்துடன் தெரியவந்தது. இதனை தொடர்ந்து, வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க் உத்தரவின் பேரில், சிதம்பரம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அகஸ்டின் ஜோஸ்வா லாமேக், சிதம்பரம் டவுன் இன்ஸ்பெக்டர் ரமேஷ்பாபு, எஸ்.ஐ. பரணிதரன், சிறப்பு எஸ்.ஐ. கணேசன், நடராஜன், காவலர் கோபாலகிருஷ்ணன், தனிப்பிரிவு காவலர் கார்த்தி உள்ளிட்ட 7 பேர் மாமூல் வாங்கிக் கொண்டு, லாட்டரி சீட்டு விற்பனைக்கு துணையாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, வேலூர் மாவட்டத்திற்கு பணி மாறுதல் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் லாட்டரி விற்பனையில் ஈடுபட்ட சிதம்பரம் நகரத்தைச் சேர்ந்த சம்புபாய் என்கிற நசீர், இசை சரவணன், கிருபாகரன், முருகன் ஆகிய 4 பேரை காவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். ஒரே நேரத்தில் சிதம்பரம் டி.எஸ்.பி, சிதம்பரம் டவுன் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட 7 பேர் பணி மாறுதல் செய்யப்பட்ட சம்பவம், கடலூர் மாவட்ட காவல் துறையில் பரபரப்பை ஏற்படுத்தி வரும் நிலையில், அதற்கான பின்னணி கூடுதல் தகவல்களும் வெளியாகி மேலும் பரபரப்பை ஏற்படுத்துகிறது. அதாவது, லாட்டரி சீட் விற்பனை தொடர்பாக நடவடிக்கை எடுக்க சொல்லி ஐ.ஜி. அஸ்ரா கார்க், எஸ்.பி. ஜெயக்குமார் உள்ளிட்டோர் உத்தரவிட்ட பிறகும் கூட, தனிப்படை ரெய்டு வரும்போதெல்லாம், லாட்டரி



விற்பனையாளர்களான சம்புபாய் என்கிற நசீர், சரவணன், கணேசன் உள்ளிட்டோருக்கு, சிதம்பரம் டவுன் இன்ஸ்பெக்டர் ரமேஷ்பாபு தலைமையிலான போலீசார், தகவல் கொடுத்து தப்பிக்க வைத்துக் கொண்டே இருந்ததாகவும் கூறப்படுகிறது. குறிப்பாக, தனிப்பிரிவு சிஐடி பரணிதரன் தான் இதற்கெல்லாம் மூளையாக செயல்பட்டதும் தெரியவந்துள்ளது.

அதாவது, சிதம்பரம் நகரில் உதவி ஆய்வாளராக பரணிதரன் என்பவர் நீண்ட காலமாக பணிபுரிந்து வந்துள்ளார். இவர் தனிப்பிரிவு சிஐடி, சட்டம்—ஒழுங்கு என சிதம்பரம் பகுதியிலேயே பணிபுரிந்து அங்குள்ள கட்டப்பஞ்சாயத்தார்களிடம் தொடர்ந்து பணம் பெற்று வந்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. நீண்ட வருடங்களாக லாட்டரி விற்பனையில் கொடிகட்டி வந்த சம்புபாய் என்கிற நசீருடன் தொடர்பில் இருந்து வந்ததை 2011 ஆம் ஆண்டு கடலூர் மாவட்ட எஸ்பி ஆக இருந்த சக்தி கணேஷ் கண்டுபிடித்து, எச்சரித்து சார்ஜ் மெமோ கொடுத்துள்ளார். இதனை தொடர்ந்து, அங்கிருந்து விருத்தாசலம், சேத்தியாத்தோப்பு என்று பரணிதரன் தூக்கி அடிக்கப்பட்டார். ஆனால், அரசியல் பின்புலத்துடன் மீண்டும் சிதம்பரத்திற்கு வந்த அதே சம்புபாய், கணேசன், மாரியப்பன் ஆகிய மூன்று லாட்டரி மொத்த வியாபாரிகளிடமிருந்து தலா ஒரு லட்சம் வீதம் மாதம் ஒன்றிற்கு மூன்று லட்சம் மாமூலாக பெற்று வந்துள்ளதும் விசாரணையில் தெரியவந்துள்ளது. ஆனால், அவ்வப்போது சிதம்பரம் நகருக்கு வருகை தரும் அதிகாரிகளை மகிழ்வித்து, குளிர்வித்து அனுப்பி வைப்பதில் கைதேர்ந்தவர் என்பதால் எஸ்.ஐ. பரணிதரனை யாரும் எதுவும் செய்ய முடியவில்லை என கூறப்படுகிறது. தற்போது வரை அங்கு சம்பாதித்தது கோடிக்கணக்கில் இருக்கும் என குற்றம்சாட்டப்படுகிறது. கஞ்சா மற்றும் டாஸ்மாக்கிலும் மாமூல் வசூலித்து வந்துள்ளதும் தெரியவந்துள்ளது. இவர் மீதான விசாரணையை மேற்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க் தீவிரப்படுத்தி உள்ளார் எனவும் கூறப்படுகிறது. லாட்டரி விற்பனையை தடுக்க வேண்டிய போலீசாரே துணையாக இருந்ததும், ஐ.ஜி. அஸ்ரா கார்க் உத்தரவின் பேரில் தனிப்படை டீம் அதை கண்டுபிடித்து, லாட்டரி விற்பனையாளர்களுக்கு துணையாக இருந்த போலீசாரை வேறு மாவட்டத்திற்கு தூக்கியடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

# பேராவூரணி தொகுதி வளர்ச்சியில்

# ஒரே சமுதாயத்துக்கே முன்னுரிமை என மக்கள் குற்றச்சாட்டு!

**பேராவூரணி சட்டமன்ற தொகுதியில் கடந்த சில ஆண்டுகளாக நடைபெறும் வளர்ச்சி பணிகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் குறித்து பொதுமக்களிடையே பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. தொகுதிக்குள் உள்ள அனைத்து சமூகங்களுக்கும் சமநிலை வாய்ந்த சேவைகள் வழங்கப்பட வேண்டியிருக்க, தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் அசோக்குமார் தனது சமுதாயத்தினருக்கே முன்னுரிமை வழங்குகிறாரா? என்ற கேள்வி தொடர்ந்து எழுந்து வருகின்றது.**

அடிப்படை வசதிகளே கிடையாது என மக்கள் குறை. தொகுதிக்குட்பட்ட பல கிராமங்கள் அடிப்படை போக்குவரத்து, குடிநீர், சாலை, தெருவிளக்கு, மயானம் போன்ற முக்கிய வசதிகளுக்கு இன்னும் பூரணமாகக் காத்திருக்கின்றன. சாலை வசதி இல்லாத காரணத்தால், சில கிராமங்களில் மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்லவும், ஆவசரமான மருத்துவ சேவைகளைப் பெறவும் பெரும் சிரமம் ஏற்படுகிறது.

“எங்கள் கிராமத்திற்கு வரும் பேருந்து நாள் இரண்டு முறையே வருகின்றது. சாலையில் இரவு நேரத்தில் செல்லவே முடியவில்லை. தெருவிளக்குகள் மாதக்கணக்காக பழுதாகவே உள்ளன,” என கூற்றொன்றை பகிர்ந்தார் ஒரு பொதுமக்கள் பிரதிநிதி.



தொகுதிக்குள் உள்ள வளர்ச்சி திட்டங்கள், விழா மேடைகள், தார்சாலை வசதிகள், கோயில் பராமரிப்பு பணிகள் போன்றவை




அனைத்தும் பெரும்பாலும் தனது சமுதாயத்தை சார்ந்த பகுதிகளில் மட்டுமே நடைபெறுகின்றன. மற்ற சமுதாயங்களைச் சேர்ந்த மக்கள் எழுப்பும் கோரிக்கைகள் பற்றி சட்டமன்ற உறுப்பினர் பார்வையிடுவதில்லை என்றும், “செய்கிறேன்” என வாக்குறுதி அளித்தும், அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுவதில்லை என்றும் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகிறார்கள். அதேபோல், சமுதாய அடிப்படையில் ஒப்பந்த பணிகள் வழங்கப்படுவதால், மற்ற சமூகங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் நிறுவனங்கள் வாய்ப்பு இழக்கின்றனர். இது, வேலைவாய்ப்பு வாய்ப்புகள் குறைவதற்கும் சமூக இடைவெளி அதிகரிக்கவும் வழிவகுக்கிறது.

பொதுமக்கள் வலியுறுத்துவது போல, பல இடங்களில் மயானம் முறையாக பராமரிக்கப்படவில்லை. மழைக்காலங்களில், உடலை எடுத்து செல்லும் பாதையிலே சேறும், குழியுமாகி, இறந்தவர்களுக்கே மரியாதை செய்ய முடியாத நிலை நிலவுவதாக

மக்கள் தெரிவித்துள்ளனர். இது போன்ற அலட்சியம், ஒரு சட்டமன்ற உறுப்பினரின் அடிப்படை பொறுப்புகளை மறுக்கின்ற செயல் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் பார்வையில், தொகுதியில் தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் செயற்பாடுகள் ஒரே சமுதாயத்தை மையமாகக் கொண்டவை என தெளிவாக தெரிகின்றது. "அவருடைய சமுதாய மக்கள் எங்கு வாழ்கிறார்களோ, அங்கேதான் தார்சாலை வருகிறதே தவிர, எங்கள் பக்கம் ஒரு மீட்டர் கூட சாலை புதுப்பிக்கப்படவில்லை," என கூறுகிறார் பாண்டவயல் பகுதியில் வசிக்கும் ஒரு கிராமப்புற பெண்.

சமுதாய அடிப்படையில் வளர்ச்சி திட்டங்களை திட்டமிடுவது அரசியலுக்கு எதிரானது என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர். ஒரு மக்கள் பிரதிநிதி, தொகுதிக்குள் உள்ள அனைத்து சமூக மக்களையும் சமமாகக் கருதி, பணி செய்ய வேண்டியவர் என்பதே ஜனநாயக நெறிமுறை.

இந்த நிலைமைக்கு மாற்றம் வேண்டும் என பொதுமக்கள் விரும்புகின்றனர். "வந்தவங்க கூட யாருக்கும் எந்த உதவியும் கிடைக்காம வராதே போகும் நிலைதான் இது. இனிமேல் நாங்க அமைதியா இருக்கப்போறதில்ல," எனக் கூறும் ஓர் சமூக இயக்கப்பணியாளர், இது தொகுதி வரலாற்றில் மாற்றம் தேவைப்படுகிற தருணம் எனக் கூறுகிறார்.

---

## ஆவடி காவல் ஆணையரகம்

# மெச்சத் தகுந்த பணிக்கான பாராட்டு!!







**04.09.2025 ஆவடி காவல் ஆணையரக எல்லைக்குக்குட்பட்ட T12 பூந்தமல்லி காவல் நிலைய செயின் பறிப்பு வழக்கு மற்றும் T16 நசரத்பேட்டை காவல் நிலைய கொள்ளை வழக்கிலும் குற்றவாளிகளை அடையாளம் கண்டு துரிதமாக செயல்பட்டு தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை பறிமுதல் செய்தும் மற்றும் W37 பட்டாபிராம், W34 எண்ணூர் அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் போக்சோ வழக்குகளில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தந்து சிறப்பாக செயல்பட்ட காவல் ஆய்வாளர்கள் மற்றும் ஆளிநர்களுக்கு ஆவடி காவல் ஆணையாளர் திரு. கி.சங்கர் இ.கா.ப அவர்கள் பாராட்டி வெகுமதி வழங்கி சிறப்பித்தார்கள்.**

# நாற்பது ஆண்டுகளில் முதல் முறையாக மாவட்ட ஆட்சியர் அரசு ஆதிதிராவிடர் பள்ளிக்கு வந்தார்!

## புதிய பள்ளி வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்!



தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்தில் உள்ள ஒட்டங்காடு ஊராட்சிக்கு உட்பட்ட நடுவிக்குறிச்சி கிராமத்தில் செயல்பட்டு வரும் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி, கடந்த நாற்பது ஆண்டுகளாக கல்வி ஒளியைப் பரப்பி வருகிறது. கடந்த காலங்களில் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்துவந்ததையடுத்து, பள்ளி ஆசிரியர்கள் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் கிராம வளர்ச்சி குழுவை அணுகி, பள்ளி மாணவர்களுக்கு தேவையான வசதிகள் செய்து தர வேண்டினார்கள்.



சிவகுரு பிரபாகரன் ஐ.ஏ.எஸ்

குழுவின் முயற்சியால், நன்கொடையாளர்களின் உதவியுடன் ரூ.35,000 செலவில் ஒரு வாகனம் வாடகைக்கு இயக்கப்பட்டு, அதன் மூலம் மாணவர்களின் வருகை கணிசமாக உயர்ந்தது. இதனைத் தொடர்ந்து, மாணவர்களின் பெரும்பான்மையான கோரிக்கையான வாகன வசதி நிரந்தரமாக வழங்கப்பட வேண்டியதென பெற்றோரும் ஆசிரியர்களும் கோரினர்.

இந்த கோரிக்கையை கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையராக உள்ள திரு. சிவகுரு பிரபாகரன், ஐ.ஏ.எஸ் அவர்களுக்கு முன்வைத்த போது, அவர் அளித்த ஊக்கமும் வழிகாட்டுதலும் முக்கியமாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து, ஏ.பி.ஜே. அப்துல் கலாம் கிராம வளர்ச்சி குழு பள்ளிக்கு புதிய வாகனம் ஒன்றை வழங்கும் திட்டத்தை குழு தலைவர் திரு.ஆசீர்வாதம் பொருளாளர் திரு.நேரு மற்றும் நிற்வாகிகள் இணைந்து நிறைவேற்றினர்.



இந்த புதிய வாகனத்தைத் துவக்கும் விழா, 2025 செப்டம்பர் 4 ஆம் தேதி வியாழக்கிழமை அன்று, பள்ளி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் முக்கிய சிறப்பு அம்சம் என்னவென்றால், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பிரியங்கா பஞ்சஜம், ஐ.ஏ.எஸ் அவர்கள். அவரே தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, புதிய வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த பள்ளிக்கு நாற்பது ஆண்டுகளில் முதன்முறையாக மாவட்ட ஆட்சியர் வருகை தந்தார் என்பது சிறப்பு.

அவருடன் இணைந்து, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலராக உள்ள திரு. எம். ரவிச்சந்திரன் மற்றும் பட்டுக்கோட்டை வட்டாட்சியர் திரு.தர்மேந்திரா அவர்கள் விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்று விழாவினை சிறப்பு செய்தனர்.

இந்த விழா, மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் பெரும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. இனி இந்த பள்ளி மேலும் பல மாணவர்களுக்காக கல்வி ஒளியைப் பரப்பும் மையமாக மாறும் என்ற நம்பிக்கை அனைவரிடமும் உருவாகியுள்ளது.

Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**

# Z System Intelligent Controls Private Limited

Intelligence in Automation

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We areconversant in handling IOT, VR & AR applications

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across India.

## Our Principles & Products

SIEMENS



PLC,HMI,Scada,VFD,IOT Solutions, RFID

azbil



Temperature Controller, Recorders, Switch, Sensors

TURCK



Sensors, Connectivity. Interface technology Analysers

AR, VR, ER Developement



## Our Service



Power



Water & Waste water



Metro



SPM



Cement



Metal



Smart World

## Our Clients

## Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.22,23, Amal Nagar, Tambaram
Chennai-600045.Tamilnadu, India.
Phone : 098404 53136

/zsystem.in
/zsystem_in
/z-system-intelligent-controls-pvt-ltd

GEESYS®

# GEESYS EB Metering Panel

Measure, Monitor, Manage and safety.

- Accurate digital voltage meter
- Single & Three Phase support
- Premium breakers & safety devices
- Modular & customizable design
- Easy installation, low maintenance
- Safe, reliable & long-lasting



Commercial Buildings I Industrial Units
Residential Complexes I Utilities & Infrastructure

Follow us

Call Us
9962012354

Mail Us
Info@geesysindia.com

Learn more
www.geesysindia.com